எல்கடுவ பிளான்டேசன்ஸ் லிமிடட்டின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளை நிர்ணயித்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

----------------------------------------------------------------------------

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களுக்கான பயன்தரும் ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாமையின் காரணமாக ரூபா 13,535,257 கிரயமான 29 வாகனங்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மதிப்பீட்டுத் தவறை இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் 46 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் சொத்துக்கள் நியாமான பெறுமதியில் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் கம்பனிக்குச் ரூபா 44,372,810 தொகையான நிலையான வைப்புக்களின் பெறுமதி 2013 ஆம் ஆண்டின் பின்னர் நியாயப் பெறுமதியில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 12 ஆம் பந்தியின் பிரகாரம் உயிர் வாழ் சொத்துக்கள் தொடக்கத்தில் இனங்காணப்படும் போதும் ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் இறுதியின் போதும் சொத்துக்களை விற்பனை செய்யும் போது மேற்கொள்ளப்பட வேண்டி இருந்த கிரயத்தை கழித்து நியாயப் பெறுமதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அச்சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்படாது 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நுகர்வு செய்யக்கூடிய உயிர் வாழ் சொத்துக்களாக காட்டப்பட்டிருந்த ரூபா 278,565,316 பெறுமதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்களாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் ஏனைய பயிர்ச் செய்கைகளின் முதிர்ச்சியடையும் காலத்தை இனங்காண்பதற்காக ஒரு நிரந்தர கொள்கை அறிமுகப்படாதிருந்ததுடன் முதிர்ச்சியடையும் ஏற்றுக்கொள்ளப்பட்ட காலத்தை மிகைத்திருந்த ரூபா 125,128,573 கிரயமான அப்பயிர்ச் செய்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரை முதிர்ச்சியடையாத பயிர்செய்கையின் கீழ் அறிக்கையிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக அவற்றிற்குரிய பெறுமானத் தேய்வு கணக்குகளிலிருந்து கைவிட்டப்பட்டிருந்தது.

(உ) கம்பனியால் ஊழியர் நம்பிக்கைப் நிதியத்திற்கு 1995 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 5,000,000 பெறுமதியான தொகுதிக்கடனை 2000 ஆம் ஆண்டின் போது விடுவிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் இந்த அறிக்கைத் திகதி வரையும் விடுவிக்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்களும் இடம் பெற்றிருக்கவில்லை. மேலும், 2000 யூன் 15 ஆந் திகதியிலிருந்து செலுத்த வேண்டிய வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்காததன் காரணமாக நடைமுறை ஆண்டின் வட்டிச் செலவாகிய ரூபா 720,000 தொகையையும் உள்ளடக்கி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய வட்டிச் செலவுகள் ரூபா 11,880,000 தொகையால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2007 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட ரூபா 6,396,615 கிரயமான தென்னைப் பயிர்ச் செய்கை தற்பொழுது வெற்றியளிக்காது காணப்பட்டிருந்தும் உரிய கிரயத்தை கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது நிதி நிலைமைக் கூற்றில் முதிர்ச்சியடையாத விளைச்சல் தருகின்ற உயிர் வாழ் விஞ்ஞான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(எ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையிடமிருந்தும் இலங்கை அரசாங்க பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திடமிருந்தும் கம்பனிக்கு கிடைக்க வேண்டியவையாகக் காட்டப்பட்டிருந்த மீதிகள் மற்றும் அந்தநிறுவனங்களின் மூலம்

பெற்றுக்கொள்ளப்பட்ட மீதிகளின் உறுதிபபடுத்தல்களுக்கிடையே முறையே ரூபா 5,538,252 மற்றும் ரூபா 147,343 வித்தியாசம் காணப்பட்டது.

(ஏ) பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு (Plantation Human Development Trust Fund) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்த வேண்டிய பங்களிப்பு பணம் தொடர்பாக அந்த நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மீதிகளின் உறுதிப்படுத்தல்களுக்கும் கம்பனியின் கணக்கு மீதிகளுக்குமிடைய ரூபா 3,977,943 வித்தியாசம் காணப்பட்டது.

(ஐ) செலகம தோட்டத்திற்குரிய ஆதனங்களை பிணையாக வைத்து 2011 ஆம் ஆண்டின் போது அரசாங்க வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 15,000,000 கடன் பணம் சம்பந்தமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன் மீதி இல்லை என்று வங்கியினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தும் கம்பனியின் கணக்குகளின் பிரகாரம் செலுத்த வேண்டியவையாக ரூபா 2,778,246 கடன் பொறுப்பு காட்டப்பட்டிருந்தது.

(ஒ) பசு வளர்ப்புச் செயற்திட்டத்திற்காக ரூபா 2,125,614 செலவு செய்து 2009 ஆம் ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் அச் செயற்திட்டத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தும் அந்த ஆண்டின் போது காணிகள் மற்றும் கட்டிடங்கள் அபிவிருத்திச் செலவாக மீண்டும் மூலதனமாக்கப்பட்டதன் காரணமாக கட்டிடங்களின் பெறுமதி அப்பெறுமதியாகப் அதிகமாக கணிக்கப்பட்டிருந்தது.

(ஓ) 2015 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்கான ரூபா 2,856,838 தொகையான நிலையான வைப்பு வட்டி வருமானத்தை மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான ரூபா 2,332,946 வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டின் போது பணமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 2,340,664 தொகையான வருமானம் காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும் போது செம்மையாக்கல்களின் கீழ் கழித்துக் காட்டப்பட்டிருந்தும் அந்த வருமானத்தை முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தோன்றிய காசுப் பாய்ச்சலின் கீழ் காசு உட்பாய்ச்சலாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஃ) மீளாய்வாண்டின் இறுதியின் போது காணப்பட்ட ஐயக் கடன் ஒதுக்கீட்டின் பெறுமதி ரூபா 4,186,615 ஆக இருந்த போதிலும் அப்பெறுமதியைக் கணிப்பீடு செய்த முறை மற்றும் அதற்கான கடன்பட்டோர் பெறுமதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(க) வணிக மற்றும் ஏனைய பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகளின் கீழ் உள்ளடக்கப்படாத ரூபா 3,777,650 பெறுமதியான 10 கணக்கு மீதிகள் பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(கா) முறையே ரூபா 77,591,127 மற்றும் ரூபா 23,222,650 பெறுமதியான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளுக்குரிய மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிக் கூற்றுக்ககள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் முனைப்பழியாக்கப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்களானது எல்கடுவ பிளான்டேசன்ஸ் லிமிடட்டின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றலையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையைத் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 2.1.1 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் கட்டளையிடப்பட்டவாறு நான் பின்வரும் விடயங்களைத் தெரியப்படுத்துகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படை, கணக்காய்விற்கான நோக்கெல்லையும் மட்டுப்படுத்தல்களும் என்பன மேலே காட்டப்பட்டுள்ளவாறாகும்.

(ஆ) முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் கீழ் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் விளக்கமளித்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டன என்பதுவும் என்னுடைய பரிசோதனைகளிலிருந்து தோன்றியதற்கு ஏற்ப கம்பனியால் முறையான கணக்கறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்பதுவும்.

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்கிய வகையில் உள்ளன என்பதுவும் எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்.

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச் சட்டத்தின் II ஆம் பகுதியின் 5(i) ஆம் பந்தி | சேவை தருனரின் கீழ் ஒரு ஆண்டிற்கு குறையாத காலம் சேவையாற்றிய ஒரு உத்தியோகத்தர் சேவையிலிருந்து விலகி ஓய்வு பெற்று அல்லது சட்டரீதியாக சேவையிலிருந்து நீக்கப்பட்ட ஒரு மாதத்திற்குள் பணிக்கொடைப் பணத்தை செலுத்த வேண்டிய போதிலும் கம்பனியில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் சேவையாற்றிய 998 ஊழியர்கள் சேவையிலிருந்து விலகி 01 மாதத்திலிருந்து 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் அந்த ஊியர்களுக்கு பணிக்கொடைப் பணத்தை செலுத்தாதன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிகைக் கட்டணத்தை உள்ளடக்கி செலுத்த வேண்டிய பணிக்கொடைப் பொறுப்பு ரூபா 87,003,386 ஆக இருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான சேதமடைந்த மற்றும் பயன்படுத்த மடியாத வாகனங்களை விற்றுத் தீர்த்தல் முன்னுரிமையளிக்கப்பட்ட செயற்பாடாக இனங்காணப்பட்டு 3 மாதங்களுக்குள் விற்றுத்தீர்க்குமாறு இச்சுற்றறிக்கையின் மூலம் குறிப்பிடப்பட்டிருந்தும் 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் ஓடும் நிலையில் இல்லாத 12 வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2015 மே 25 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றிக்கை | உத்தியோக வாகனங்களுக்கான படிகளுக்கு தகைமையற்ற இரண்டு உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது போக்குவரத்து மற்றும் எரிபொருள் படியாக ரூபா 696,000 செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | அங்கீகரித்த சம்பளங்களும் படிகளும் உள்ளடக்கப்படாத சம்பளங்களையும் படிகளையும் செலுத்துவதற்கு முன்னர் சம்பளங்கள் மற்றும் பதவியணிகள் ஆணைக்குழுவின் சிபார்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது கம்பனியின் தலைவருக்கும் பொது முகாமையாளருக்கும் மீளாய்வாண்டின் போது வேலையாளர் படியாக ரூபா 838,080 பணம் செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதி விளைவுகள் ரூபா 62,756,178 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 26,922,928 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 35,833,250 வீழ்ச்சி சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான பிரதான பயிர்ச்செய்கையிலிருந்து அடைந்த நட்டத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 25,698,422 ஆல் அதிகரித்தல் நிதி விளைவுகளின் வீழ்ச்சி தொடர்பாக பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

4. **செயற்பாட்டு மீளாய்வு**

4.1 **செயலாற்றல்**

4.1.1 **செயல் நடவடிக்கையும் மீளாய்வும்**

4.1.1.1 **மீளாய்வாண்டிற்கான பாதீட்டு இலக்கை அடைந்து கொள்வது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) ரத்வத்த தோட்டத்தின் மீளாய்வாண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட பதப்படுத்தப்படாத தேயிலை கொழுந்துகளின் விளைச்சல் 725,000 கிலோ கிராம்களாக இருந்த போதிலும் உள்ளபடியான விளைச்சல் 421,147 கிலோ கிராம்களாகும். அதற்கினங்க மீளாய்வாண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட இலக்கில் 42 சதவீதம் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஹபுகஸபிடிய தோட்டத்தின் மீளாய்வாண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட உலர்த்திய கொக்கோ விதைகளின் அளவு 5,000 கிலோ கிராம்களாக இருந்த போதிலும் கொக்கோ மரங்கள் விளைதிறன் ஆயுட்காலத்தை மிகைத்திருந்தமை மற்றும் விவசாயத்திற்கு இரசாயனப் பசளைகள் முறையாக போடப்படாமையின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட விளைச்சலில் 15 சதவீத அளவிலான குறைந்த விளைச்சல் மீளாய்வாண்டின் போது பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

4.1.1.2 **மாகாண தோட்டங்களின் செயலாற்றல் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**(அ) ரன்வத்த தோட்டம்**

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது தேயிலை கொழுந்து விளைச்சல் 333,404 கிலோ கிராம்களாக அதாவது 44 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. தோட்டத்திற்குரிய 173.30 ஹெக்டயர் காணிகளில் 43 சதவீதம் அளவான காணிகள் தேயிலைப் பயிர்ச்செய்கைக்காக ஈடுபடுத்தப்படாமை, பழைய பயிர்களை அகற்றி புதிய பயிர்ச் செய்கைகளில் ஈடுபடாமை, பசளைகள் மற்றும் இரசாயனப் பொருட்கள் தொடர்ச்சியாக ஈடுபடுத்தப்படாமை என்பன விளைச்சல் குறைவடைந்தமைக்கு தாக்கமளித்திருந்தன.

(ii) ரத்வத்த தோட்டத்தின் வெளித் தோட்டக்காரர்களுக்கு (Out Growers) வழங்கப்பட்டுள்ள 108.42 ஹெக்டயர் காணியின் மூலம் மீளாய்வாண்டின் போது உற்பத்தி செய்யப்பட்ட தேயிலைக் கொழுந்துகளின் அளவு 58,529 கிலோ கிராம்களாக இருந்ததுடன் அதனை 2015 ஆம் ஆண்டிற்கான தேயிலைக் கொழுந்து உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 29,676 கிலோ கிராம்கள் குறைவாகும்.

(iii) ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தொழில்நுட்ப கூற்றின் பிரகாரம் முதிர்ச்சியடைந்த மிளகு செடியின் சராசரி விளைச்சல் ஒரு ஆண்டிற்கு உலர்த்திய மிளகு 1 கிலோ கிராமிற்கம் 2.5 கிலோ கிராமிற்கும் இடையே இருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது தோட்டத்தின் அப்பெறுமதி 0.3 கிலோ கிராமிற்கும் 0.5 கிலோ கிராமிற்கும் இடைப்பட்ட குறைந்த பெறுமதியாகும். விவசாயத் திணைக்களத்தின் நியமங்களின் பிரகாரம் பயிர்செய்கைகள் மேற்கொள்ளப்படாமை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் இடம் பெறாமையின் காரணமாக கம்பனியின் மிளகு விளைச்சல் குறைவடைந்திருந்தது.

(ஆ) **ஹபுகஸ்பிடிய தோட்டம்**

(i) **இறப்பர் பயிர்ச்செய்கை**

இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் பிரசுரிக்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் ஒரு ஹெக்டயருக்கான வருடாந்த இறப்பர் பால் விளைச்சல் 819 கிலோ கிராம்களாக இருக்க வேண்டிய போதிலும் தோட்டத்தின் அப்பெறுமதி 278 கிலோ கிராம்கள் அளவில் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. இதற்காக முதிர்ச்சியடைந்த இறப்பர் பயிர்ச்செய்கைகளில் 90 சதவீதம் அளவான பயிர்ச்செய்கை விளைச்சல் தரும் ஆயுள் காலத்தை கடந்திருந்தமை, பழைய பயிர்செய்கையை நீக்கி புதிய பயிர் செய்கையில் ஈடுபடாமை, ஒரு ஹெக்டயருக்கான இறப்பர் நாற்றுக்கள் 550 ஆகக் காணப்பட வேண்டிய போதிலும் தோட்டத்தில் இந்த அளவு 215 ஆகிய குறைந்த அளவில் காணப்பட்டமை என்பன இதற்கு தாக்கமளித்திருந்தன.

(ii) **கொக்கோ பயிர்ச்செய்கை**

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவின் பிரகாரம் ஒரு கொக்கோ நாற்றின் வருடாந்த உலர்ந்த கொக்கோ விதைகளின் அளவு 0.9 கிலோ கிராம்களுக்கும் 1.3 கிலோ கிராம்களுக்கும் இடைப்பட்டதாக இருக்க வேண்டிய போதிலும் தோட்டத்தில் அப்பெறுமதி 100 கிராம்கள் அளவில் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. ஒரு கொக்கோ மரத்தின் விளைச்சல் தரும் ஆயுட்காலம் 25 ஆண்டுகளுக்கும் 30 ஆண்டுகளுக்கும் இடைப்பட்டதாக இருந்தும் ஹபுகஸ்பிடிய தோட்டத்தில் விளைச்சல் தரும் 28,100 கொக்கோ நாற்றுக்களில் 20,513 நாற்றுக்கள் அதவாது 73 சதவீதமானவை விளைச்சல் தரும் ஆயுட் காலத்தைக் கடந்திருந்தமை, பசளை மற்றும் இரசாயனத் திரவியங்கள் தொடர்ச்சியாகப் பயன்படுத்தாமை என்பன குறைந்த விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்கு காரணமாக இருந்தன.

(iii) **தேங்காய் விளைச்சல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- தோட்டத்தில் காணப்பட்ட தென்னை பயிர்செய்கையில் 50 சதவீதம் அளவானவை விளைச்சல் தராத பயிர்ச்செய்கையாக இருத்தல் மற்றும் இரசாயனப் பசளை தொடர்ச்சியாக ஈடுபடுத்தப்படாமையின் காரணமாக தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவின் பிரகாரம் ஒரு மாதத்தின் வருடாந்த சராசரி விளைச்சல் 72 தேங்காய்களாக இருந்த போதிலும் தோட்டத்தில் அந்த விளைச்சல் 04 தேங்காய்களுக்கும் 31 தேங்காய்களுக்கும் இடைப்பட்ட குறைந்த வீச்சில் காணப்பட்டது.

- தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவின் பிரகாரம் ஒரு ஹெக்டயரில் காணப்பட வேண்டிய தென்னை மரங்களின் அளவு 158 மரங்களாக இருக்க வேண்டிய போதிலும் தோட்டத்தின் 05 துறைகளில் அப் பெறுமதி 3 இற்கும் 120 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. குறைந்த மரங்களின் அளவிற்கு மீண்டும் தென்னை நாற்றுக்கள் பயிரிடப்படாதிருந்ததுடன் காணப்படுகின்ற பயிர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
- கம்பனியால் 2007 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலத்தில் இத் தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட

தென்னைப் பயிர்ச்செய்கையில் 31 சதவீதமும், இறப்பர் மற்றும் தேக்குப் பயிர்செய்கையில் 12 சதவீதமும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அழிவடைந்திருந்தன. இதற்காக போதியளவில் நீர் வழங்கல் வழங்கப்படாமை மற்றும் காடு வெட்டல் இடம் பெற்றிருக்காமை, பசளைகளும் இரசாயனப் பொருட்களும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டிருக்காமை ஆகிய விடயங்கள் தாக்கமளித்திருந்தது. எவ்வாறாயினும், இப் பயிர்செய்கைக்காக 2007 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 14,160,233 மொத்த தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலகம தோட்டத்தில் 3 ஏக்கர் 2 ரூட் 22 பேர்ச்சஸ் அளவானவை ஒரு கம்பனிக்கு 2006 யூன் 01 ஆந் திகதியிலிருந்து 30 ஆண்டுகள் காலத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த உடன்படிக்கையின் பிரகாரம் கம்பனியின் எழுத்து மூல அங்கீகாரமின்றி குத்தகைதாரருக்கு உப குத்தகைக்கு வழங்குவதற்கு அங்கீகரிக்கப்படாதிருந்த போதிலும் குத்தகைதாரரினால் உரிய காணி 2012 ஆம் ஆண்டின் போது உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க அது சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பன்சல்தென்ன தோட்டத்திற்குச் சொந்தமான தேயிலைத் தொழிற்சாலைகளை குத்தகைக்கு வழங்குவதற்காக குத்தகை தாரர்களுடன் 2013 ஆம் ஆண்டின் போது செய்து கொள்ளப்பட்ட உப குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகைதாரர்களிடமிருந்து ரூபா 1,908,000 மீளச் செலுத்தப்படுகின்ற வட்டியில்லாத வைப்பு பணம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை வைப்புப் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) வெள்ள நிவாரணத்தை வழங்குவதற்காக கம்பனியின் தலைமை அலுவலக மற்றும் தோட்ட ஊழியர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 330,150 பணம் மீளாய்வாண்டின் போது கம்பனியின் ஒரு வங்கி கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் 2017 சனவரி மாதத்தின் போது கம்பனியின் தலைவருக்கு அப்பணம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டமைக்கான ஆவணங்கள் கம்பனியிடம் இருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

மீளாய்வாண்டின் போது எல்கடுவ தோட்டத்தில் இடம்பெற்ற கராம்பு மரங்களை கணக்கெடுப்பு செய்தலில் 2015 ஆம் ஆண்டின் போது ஈடுபடுத்தப்பட்ட இலக்கங்களை நீக்கி புதிய இலக்கங்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதன் போது 2015 ஆம் ஆண்டில் காணப்பட்ட 3470 ஆன கராம்பு மரங்களின் எண்ணிக்கை மீளாய்வாண்டின் போது 1947 மரங்கள் வரை அதாவது 1,523 மரங்களால் குறைவடைந்திருந்தது. தோட்டத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்களின் மாதாந்த மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் உரிய கணக்கெடுப்பு திகதி வரை கராம்பு மரங்கள் அழிவடைதல் அல்லது அகற்றுதல் சம்பந்தமான தகவல்கள் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. அது சம்பந்தமாக கம்பனியினால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நாலந்த தோட்டத்தில் ஒரு ஏக்கர் அளவான காணியில் காணப்பட்ட காரீயச் சுரங்கத்தை தோண்டுவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது சாத்திய வள ஆய்வும் பூகோளவியல் பரிசோதனைகளும் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 21,407 பணம் செலவு செய்யப்பட்டிருந்தும் அக்காரீயச் சுரங்கத்தை தோண்டுதலை 2017 ஒக்தோபர் மாதம் இறுதி வரை ஆரம்பிப்பதற்கு கம்பனியின் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ரத்வத்தை தோட்டத்திற்குச் சொந்தமான 5.04 ஹெக்டயர் வயல் காணியையும் 13.66 ஹெக்டயர் அளவான பயிர்ச்செய்கைக்காகப் பயன்படுததக்கூடிய காணியையும் விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு அல்லது குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

## 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கம்பனியால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு, தோட்ட ஊழியர்களின் சேமலாப சங்கம் மற்றும் இலங்கை தோட்ட ஊழியர்களின் சேமலாப சங்கத்திற்கு 15 ஆண்டுகளாக மாதாந்தம் முறைப்படியாக பங்களிப்பு பணத்தை அனுப்பாமையின் காரணமாக மீளாய்வாண்டு வரை முறையே ரூபா 96,445,172, ரூபா 9,470,126 ரூபா 2,855,169 மற்றும் ரூபா 2,449,229 தண்டப் பணத்தை செலுத்த வேண்டியிருந்தது.

## 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் சிறிய ஏற்றுமதிப் பயிர் விலைப்பட்டியலின் பிரகாரம் 2017 மே 31 ஆந் திகதியில் உள்ளவாறு உலர்த்திய ஒரு கிலோ கிராம் மிளகின் சராசரி சந்தை விலை ரூபா 1,398 ஆக இருந்ததுடன் ரத்வத்தை தோட்டத்தினால் அந்த விலைகளை மதிப்பீடு செய்யாது ரூபா 850 பணத்திற்கு விற்பனை செய்ததன் காரணமாக கம்பனி இழந்த வருமானம் ரூபா 206,048 ஆகும்.

## 4.7 பதவியணியினர் நிர்வாகம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முறைப்படியான அங்கீகாரமின்றி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு மேலதிகமாக இரகசிய செயலாளர், முகாமையாளர் (சந்தைப்படுத்தல்), பொது மக்கள் தொடர்பாடல் உத்தியோகத்தர், முகாமையாளர் (MIS) ஆகிய புதிய 4 பதவிப் பெயர்களுக்காக நான்கு தனிப்பட்டவர்களை சேர்த்துக்கொண்டு மீளாய்வாண்டின் போது சம்பளங்களும் படிகளுமாக ரூபா 2,460,576 செலுத்தப்பட்டிருந்தது. மேலும், கம்பனியின் பொது முகாமையாளர் பதவிக்கு 2012 ஆம் ஆண்டிலிருந்து நிரந்தர அடிப்படையில் உத்தியோகத்தரை நியமிக்காது ஒப்பந்த அடிப்படையில் இரண்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

## 4.8 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஆம் ஆண்டின் போது மாத்தளை மாவட்டத்தில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட கம்பனியின் செயற்பாட்டு அலுவலகத்திற்கு கொழும்பு பிரதான அலுவலகத்தை கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்காமையின் காரணமாக அக்கட்டிடம் சேதமடைந்து காணப்பட்டது.

(ஆ) செலவுல்ல தோட்டத்தின் மொத்த காணியின் அளவு 354.75 ஹெக்டயர்களாக இருந்ததுடன் அதில் 229.75 ஹெக்டெயர்களை அண்மித்த காணிகள் அத்து மீறிக் குடியிருப்பாளர்களால் பயன்படுத்தப்பட்டு வந்ததுடன் 2018 திசெம்பர் 31 வரை அத்துமீறிக் குடியிருப்பாளர்களை அகற்றி இக்காணியை கம்பனியின் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இரண்டு தோட்ட அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பிழைகள் சம்பந்தமான வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருகின்ற வேளையில் அந்த இரண்டு உத்தியோகத்தர்களையும் சேவையில் அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) ரத்வத்தை தோட்டத்தின் கராம்புகளை விற்பனை செய்வதற்கான கேள்விகளை மேற்கொள்ளும் போது இடம்பெற்ற ரூபா 15 இலட்சம் அளவான நிதி நட்டம் தொடர்பாக 06 கேள்விதாரர்கள் கோரப்பட்டு சான்றுகளைப் பதிவு செய்யும் அறிக்கை பொது முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனி உரிய அறிக்கையை சமர்ப்பித்திருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன் பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | வெளித்தரப்பினர்களால் காணிகளைச் சுவீகரித்தல், வாகனப் பராமரிப்பு, காப்புறுதி நடவடிக்கை, தேயிலைத் தொழிற்சாலைகளைப் பேணுதல், என்பன பலவீனமான மட்டத்தில் காணப்பட்டமை. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீட்டின் மூலம் இலக்குகள் தோற்றுவிக்கப்பட்டிருந்தும் அவற்றினை அடைந்துகொள்வதில் தாமதங்களும் மேற்பார்வை நடைமுறை பலவீனமான நிலையிலும் காணப்பட்டமை. |
| (ஆ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | நீண்டகால கடன் மீதிகளை தீர்த்து வைப்பதற்கும் அறவீடு செய்வதற்குமான நடைமுறையில் பலவீனங்கள் காணப்படல் |
| (ஈ) மனித வளங்கள் முகாமைத்துவம் | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேகரிப்பு நடைமுறைகளுக்கு முரணாக ஆட்சேர்ப்புக்கள் இடம் பெறுதல் |